SIRஐ ஆரம்பம் முதலே தி.மு.க. எதிர்த்து வருகிறது!

ரூ.1000 கோடி போதைப் பொருள் கடத்திய த.வெ.க. நிர்வாகியின் பின்னணியில் யார்?

சீல்ஸில் மட்டும் விஜய் நல்லவராக நடித்தால் போதாது!

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பேட்டி!

சென்னை, அக்.18-

SIRஐ ஆரம்பம் முதலே தி.மு.க. எதிர்த்து வருகிறது என்றும் – ரூ.1000 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் கடத்திய த.வெ.க. நிர்வாகியின் பின்னணியில் யார்? என்றும் – போதைப் பொருளைத் தடுக்க அமைத்த 65 படைகள் எங்கே? Reels இல் மட்டும் நல்லவராக நடித்தால் போதாது என்றும் சென்னை – அண்ணா அறிவாலயம் – கழக அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. குறிப்பிட்டார்.

அவர் அளித்த பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நீங்கள் படித்திருப்பீர்கள்.

குறிப்பாக, SIR குறித்து காங்கிரஸ் உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள், தமிழக வெற்றிக் கழகத் தோடு இணைந்திருக்கிற சில அரசியல் கட்சிகள் போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள் என்பதற் காக, திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தி.மு.க.வின் மீது ஒரு குற்றச்சாட்டை முன்வைத் தார்கள். SIRக்கு நாங்கள் ஆதரவாக இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள்.

அனைத்து முதல்வர்களுக்கும் கடிதம்!

ஆனால், SIR கொண்டுவரப்பட்ட காலத்திலி ருந்தே திராவிட முன்னேற்றக் கழகம்தான் அழுத்தம் திருத்தமாக நாடாளுமன்றத்திற்குள் ளும் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் எதிர்ப் பைப் பதிவு செய்து வருகிறது. இன்னும் சொல் லப்போனால், அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கி றோம். சில மாநில முதலமைச்சர்கள் சென் னைக்கே வந்து இது குறித்து விவாதித்து, தீர்மா னங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தொடர்ந்து SIRஐ எதிர்த்து, அதனால் ஏற்படும் பாதிப்புகளை அம்பலப்படுத்தி வருகின்ற பிரதான அரசியல் கட்சியாக இந்தியாவில் திராவிட முன் னேற்றக் கழகம் இருந்தது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

காலவரிசைப்படி திராவிட முன்னேற்றக் கழ கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தது என்பதை, இந்தத் தீர்மானத்தின் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கும் இந்திய அரசியல் ஆர் வலர்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்ப தற்காகத்தான் இன்றைய தினம் இந்தத் தீர்மா னத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

காங்கிரசுக்கு தார்மீக உரிமை இல்லை!

அந்தத் தீர்மானத்திலேயே காங்கிரஸ் கட்சியி னுடைய நிலைப்பாடு என்ன, எங்களைக் கேள்வி கேட்பதற்கான தார்மீக உரிமை அவர்க ளுக்கு இருக்கிறதா என்பதையும் நாங்கள் கேள்வி எழுப்பியிருக்கிறோம்.

எனவே, SIR கொண்டுவரப்பட்ட காலத்திலி ருந்து எந்தவிதமான தடுமாற்றமும் இல்லாமல், தொடர்ந்து ஒரே மாதிரியான நிலைப்பாட்டை எடுத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதற் காகத்தான் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. குறிப்பிட்டார்.

இதனையடுத்து செய்தியாளர்களின் கேள்வி களுக்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

SIR விவகாரத்தில் AIADMK உள்ளிட்ட கட்சிக ளின் நிலைப்பாடு குறித்துப் பேசுகிறார்கள்.

கொளத்தூரில் தோல்வியடைந்ததற்கு SIR தான் காரணம் என்றும், தி.மு.க. ஆட்சிக்கு வர முடியாமல் போனதற்கும் SIR தான் காரணம் என் றும் சொல்கிறார்கள். முதலில் அவர்கள் தங்க ளுக்குள் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள ட்டும். அதற்குப் பிறகு எங்களி டம் வந்து பேசட்டும்.

SIR இல் தவறுகள் நடந்திருந்தால், அது எப் போது வேண்டுமானாலும் வெளிச்சத்திற்கு வர லாம். அப்படி வரும்போது நாங்கள் அதை ஏற் றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம்.

டெல்லியில் பாஜகவினர் போராட்டம் நடத்து வதைப் போல, தமிழ்நாட்டிலும் பெரிய அளவில் போராட்டம் நடத்த வேண்டும் என்று திருமாவ ளவன் உள்ளிட்ட பலர் கூறியிருக்கிறார்கள்.

தி.மு.க.வின் நிலைப்பாட்டில் என்ன இருக்கி றது என்பதைப் பாருங்கள். அந்தப் போராட் டத்தை நாங்கள் ஆதரித்திருக்கிறோம். கனி மொழி அவர்கள் சென்றிருக்கிறார். நானும் தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்டோரும் சென்று, சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து, அங்கே வெளியிலும் தரையில் அமர்ந்திருக்கிறோம்.

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? அந்தப் போராட்டத்தை ஊக்குவிப்பதாகத்தானே அர்த் தம்? போராட்டம் தொடர வேண்டும், வெற்றி பெற வேண்டும் என்பதுதானே அதற்கு அர்த்தம்?

செய்தியாளர்: SIR நடைபெறாமல் இருந்தி ருந்தால் 160 இடங்களுக்கு மேல் வெற்றி பெற் றிருப்போம் என்று தமிழக வெற்றிக் கழகத்தினர் கூறுகிறார்களே?

ஆ.இராசா: அவர் எந்தக் கணக்கில் அப்படிச் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் பேசுவதெல்லாம் ஒரு தனிக் கணக்காக இருக்கிறது.

நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நீங்கள் அதனை என்னிடம் கேட்டுக்கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. அவரிடமே நேரடியாகக் கேளுங்கள். அவர் அருகிலேயே இருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் நீண்ட காலமாக இருக் கும் ஒரு தேர்ந்த அரசியல்வாதி திருமாவளவன். ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலும் இந்த விவகாரத்திற்காக அவரும் குரல் கொடுத்தி ருக்கிறார்.

முதலில் சகோதரர் திருமாவளவனிடம் கலந்து ஆலோசித்து, தி.மு.க.வுக்கு முன்னால் என்ன மாதிரியான கேள்விகளை வைக்கலாம் என்று கேட்டுவிட்டு வருவது நல்லது. இல்லை யென்றால் அவர்களுக்குள்ளேயே வெட்டுக்குத்து வரும். அது நல்லதல்ல.

எதிர்க்கட்சியினரே தி.மு.க. தோல்வியடைந் ததற்கு SIR ஒரு காரணம் என்று கூறும்போது, ஜனநாயகத்தில் அதை அவ்வளவு எளிதாகப் புறந் தள்ளிவிட முடியாது. அது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

செய்தியாளர்: அது பா.ஜ.க.வின் பிரதான மான கோரிக்கை. ஆனால், காங்கிரஸ் கட்சியின் கோரிக்கை என்ன?

ஆ.இராசா: தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி யிலும், கேரளாவில் கூட்டணியிலும், கர்நாடகத் திலும் காங்கிரஸ் இருக்கிறது. இந்த மாநிலங்க ளில் தவறுகள் நடந்திருக்கின்றன என்று அவர்களே கூறுகிறார்கள். அதைத்தான் எங்களு டைய தீர்மானத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

பா.ஜ.க.வின் நிலைப்பாட்டை விடுங்கள். தமிழ்நாட்டில் தேர்தல் ஆணையம் தவறு செய் திருக்கிறது என்பதும், SIR நடைமுறையில் தவறு கள் இருக்கின்றன என்பதும்தான் அவர்களு டைய கருத்து.

குறிப்பாக, எல்லைப்புற மாநிலங்களில் இந்தத் தவறுகள் அதிகமாக நடைபெறுகின்றன என்று கூறுகிறார்கள்.

பாகிஸ்தான், வங்கதேசம், சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பிற நாட்டவர்கள் இந்தியாவுக் குள் வருவதைத் தடுக்கிறோம் என்ற பெயரில், இங்குள்ள இஸ்லாமியர்கள், சிறுபான்மை மக் கள், பௌத்தர்கள் உள்ளிட்டவர்களை வாக்கா ளர் பட்டியலிலிருந்து நீக்குவதுதான் ஒன்றிய அரசின் நோக்கம் என்று பலமுறை பேசியிருக்கி றோம்.

மற்ற மாநிலங்களிலும் தவறுகள் நடைபெறு கின்றன என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும் போது, இந்த மூன்று மாநிலங்களில் மட்டும் காங் கிரஸ் கட்சி ஏன் பாதுகாப்பான நிலைப்பாட்டை எடுத்துக்கொள்கிறது?

இரட்டை நிலைப்பாடு!

பா.ஜ.க. ஒரே நிலைப்பாட்டை எடுக்கிறது என்று வைத்துக்கொண்டாலும், காங்கிரஸ் கட் சியின் நிலைப்பாடு என்ன? கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் கூட்டணியில் இருக்கிறீர்கள். அமைச் சரவையிலும் இடம் பெற்றிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது, ஒரு மாநிலத்தில் ஒரு நிலைப்பாட்டையும், இன்னொரு மாநிலத்தில் வேறு நிலைப்பாட்டையும் எடுப்பது இரட்டை நிலைப்பாடுதானே என்று நாங்கள் கேட்கிறோம்.

செய்தியாளர்: தி.மு.க. 'இந்தியா' கூட்டணியில் இருந்துகொண்டு, SIR விவகாரத்தை தேசிய அளவில் கொண்டுசெல்ல மூன்றாவது அணியுடன் இணைந்து செயல்படு வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?

ஆ.இராசா: இந்தியாவில் ஜனநாயகம் இல்லை, ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண் டிய தேர்தல் ஆணையம் தேர்தலை முறையாக நடத்தவில்லை, தேர்தலை நடத்துபவர் திருடர் என்று கூறுகிறார்கள். அதற்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம். அவ்வளவுதான்.

அதைத் தாண்டி அவர்கள் எங்களிடம் எதுவும் பேசவில்லை. நாங்களும் அவர்களிடம் எதுவும் பேசவில்லை.

செய்தியாளர்: தமிழக வெற்றிக் கழக நிர் வாகி ஒருவரின் வீட்டில் சுமார் 135 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கி றது. ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் போதைப் பொருள் விவகாரம் தொடர்பாக மிகப்பெரிய போராட்டங்களையும் விமர்சனங்களையும் முன்வைத்த கட்சி, இன்று தன்னுடைய நிர்வாகி வீட்டிலேயே இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொருள் சிக்கியிருப்பது குறித்து எந்தத் தகவலையும் தெரிவிக்காமல் இருக்கிறதே?

ஆ.இராசா: முதலமைச்சர் பதவியேற்ற மேடையிலேயே ஒரு கையைக் காட்டினார். எல்லோருக்கும் தெரியும்.

தி.மு.க. ஆட்சியில் போதைப்பொருளைக் கட் டுப்படுத்தவில்லை, பெண்களுக்கு எதிரான பாலி யல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவில்லை என்று ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கூச்ச லிட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளை நம்பி மக் கள் வாக்களித்திருக்கலாம். அதனால் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கலாம். பரவாயில்லை. ஆனால், இப்போது நான்கு மாதங்கள் கடந்து விட்டன.

போதைப்பொருள் தடுப்புப் பணிக்காக 65 குழுக்கள் செயல்படுகின்றன. ஏற்கனவே இந்தப் பணிகளை மேற்கொள்வதற்குப் போதுமான குழுக்கள் இல்லை என்று கூறியவர்கள், இப்போது இவ்வளவு குழுக்களை அமைத்திருக் கிறார்கள்.



தற்போது டி.ஜி.பி.யாக இருப்பவரின் பணி களை நீங்கள் கவனித்துப் பாருங்கள். அவரு டைய தலைமையில் நடைபெற்ற நடவடிக்கை கள் குறித்து எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டோர் ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். அந்த நடவடிக்கைகளை எல்லாம் கொச்சைப்படுத்தி, இந்த ஆட்சியில் எது வும் நடைபெறவில்லை என்று கூறியதற்குப் பிற குதான் அவரை டி.ஜி.பி.யாக நியமித்தார்கள். அதிலேயே ஒரு புரியாத புதிர் இருக்கிறது.

ஆனால், இப்போது விஜய் முதலமைச்சரான பிறகு, 65 குழுக்களை அமைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த 65 குழுக்களும் கடந்த நான்கு மாதங்களாகத் தமிழ்நாட்டில் பணி யாற்றிக் கொண்டிருக்கின்றன.

உங்களிடம் உளவுத்துறை இருக்கிறது. 65 குழுக்கள் இருக்கின்றன. இவை எல்லாவற்றை யும் தாண்டி, டெல்லியிலிருந்து மத்திய வரு வாய்ப் புலனாய்வுத் துறையினர் (DRI) வந்து இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொரு ளைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

135 கிலோ மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளின் மதிப்பு, டெல்லியில் பேசினால் சுமார் 800 கோடி முதல் 1,000 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் இவ்வளவு பெரிய அளவில், சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது மிகவும் தீவிரமான விஷயம்.

போதைப்பொருள் கடத்தலுக்கான மையமாக தமிழ்நாடு!

இதுவரை சிறிய அளவில் போதைப்பொருள் கடத்தல் நடந்ததாகச் செய்திகள் வந்திருக்கின் றன. சில இடங்களிலிருந்து சிறிய அளவிலான போதைப்பொருட்கள் கொண்டு வரப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், இப்போது என்ன நடந்திருக்கிறது? தமிழ்நாடு போதைப்பொருள் கடத்தலுக்கான மையமாக மாறியிருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

135 கிலோ போதைப்பொருள் இங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட இருந்ததா கக் கூறப்படுகிறது.

நான் மீண்டும் கேட்கிறேன். இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொருள் தமிழ்நாட் டில் இருந்திருக்கிறது. இங்கு 65 குழுக்கள் செயல் பட்டுக்கொண்டிருக்கும்போது, இன்னும் எவ்வ ளவு போதைப்பொருள் இருக்கிறது என்பது யாருக்குத் தெரியும்?

கேட்டால், தி.மு.க. ஆட்சியில் இப்படித்தான் நடந்தது என்று சொல்வார்கள். அப்படியானால், இப்போது என்ன நடந்திருக்கிறது என்பதை ஒப் பிட்டுப் பாருங்கள்.

செய்தியாளர்: தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரே?

ஆ.இராசா: அவர் வெறும் கட்சிப் பிரமுகர் மட்டுமல்ல. தொகுதிப் பொறுப்பாளர்.

தி.மு.க.வில் யாராவது தவறு செய்துவிட்டு, ராஜாவுடனோ, உதயநிதியுடனோ, பரந்தாமனு டனோ புகைப்படம் எடுத்திருந்தால், அவர்களைத் தி.மு.க.வினர் என்று சொல்வீர்கள்.

ஆனால், இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட வர் கட்சியின் அதிகாரப்பூர்வப் பொறுப்பில் இருந் தவர். மயிலாடுதுறை மாவட்டம், கீழையூர் ஒன் றியச் செயற்குழு உறுப்பினராக இருந்தவர் என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னதாகவும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் தொடர்பாகப் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட செய்திகள் வந்திருக்கின் றன. ஈரோட்டைச் சேர்ந்த அருணன் என்பவரி டம் 140 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டதா கவும், வேதாரண்யம் வடக்கு ஒன்றியச் செயலாளர் அருண்பாண்டியனிடம் 120 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதாகவும், பூபதி ராஜா என்ற நிர்வாகியிடம் ஜூன் 26ஆம் தேதி வாகனச் சோதனையில் 12 கிலோ போதைப்பொ ருள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

இவர்கள் எல்லோருமே கட்சியின் அதிகாரப் பூர்வப் பொறுப்புகளில் இருந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால், எங்களுடன் யாராவது ஒரு புகைப் படம் எடுத்துக்கொண்டால், அதை வைத்துக் கொண்டு எவ்வளவு அரசியல் செய்வீர்கள்!

ஒரு அரசியல் கட்சித் தலைவர், அரசியல் பிர முகர், நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்ட மன்ற உறுப்பினர் யாராவது எங்களுடன் வந்து நிற்கும்போது, அவர்களைப் பற்றிய எல்லா விவ ரங்களையும் நாங்கள் முன்கூட்டியே விசாரித்து, அவர்களுடைய தொடர்புகள் அனைத்தையும் சரிபார்த்துவிட்டுத்தான் புகைப்படம் எடுத்துக் கொள்ள முடியும் என்று சொல்ல முடியுமா?

அரசியல் தலைவர்களுடன் புகைப்படம் எடுத் துக்கொண்டதை வைத்து எவ்வளவு பிரச்சாரம் செய்தீர்கள்!

ஆனால், இப்போது உங்கள் கட்சியின் நிர் வாகி, தேர்தல் பொறுப்பாளர், ஒன்றியச் செயலா ளர் உள்ளிட்டோர் தொடர்பாக இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொருள் பறிமுதல் செய் யப்பட்டிருக்கிறது.

இதன் மதிப்பு சுமார் 1,000 கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது. இவ்வளவு பெரிய அளவி லான போதைப்பொருள் தமிழ்நாட்டில் வைக்கப் பட்டு, இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டதா கச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அப்படியானால், இன்னும் எவ்வளவு போதைப்பொருள் இருக்கிறது? இன்னும் எத் தனை இடங்களில் இருக்கிறது? இதற்கு முன்னர் தமிழ்நாட்டில் இதேபோன்ற பொருள் இவ்வளவு பெரிய அளவில் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதா?

இந்த மெத்தம்பெட்டமைன் விவகாரம் என் பது வெறும் அரசியல் பிரச்சினை மட்டுமல்ல. தமிழ்நாட்டின் நிர்வாகத்துக்கும், பாதுகாப்புக்கும் தொடர்புடைய மிக முக்கியமான பிரச்சினை.

தமிழ்நாட்டில் இதற்கு முன்னர் இவ்வளவு பெரிய அளவில் இந்த வகையான போதைப்பொ ருள் பறிமுதல் செய்யப்பட்ட வரலாறு இருக்கிறதா என்பதையும் ஆராய வேண்டும்.

65 குழுக்களை அமைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால், இவ்வளவு பெரிய அள விலான போதைப்பொருள் எங்கிருந்து வந்தது? எங்கே கொண்டு செல்லப்பட்டது? இதைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது?

இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும்போது, உரிய விசாரணை நடத்தப்பட்டு, உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும்.

தலைவர் முடிவு செய்வார்!

செய்தியாளர்: இவ்வளவு பெரிய அளவில் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கி றதே. இது குறித்து தி.மு.க. பெரிய அளவில் போராட்டம் நடத்துமா? தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகி றார்கள் என்று கூறி போராட்டம் நடத்துவீர்களா?

ஆ.இராசா: அதைப் பற்றி எங்கள் தலைவர் முடிவு செய்வார்.

ஒரு குறிப்பிட்ட நிர்வாகியிடம் இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொருள் சிக்கியிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு, யாரும் எங்களைக் கைது செய்ய மாட்டார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் செயல்பட்டார்களா என்ற கேள்வி எழுகிறது.

இது ஒரு போதைப்பொருள் கடத்தல் மைய மாக மாறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நீங் கள் முன்வைக்கிறீர்கள். நான் ஏற்கனவே சொன் னேன். இப்போது இது ஒரு மையமாக மாறிவிட்டதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இதற்கு முன்னர் ஒருவரைக் கைது செய்த போது, டெல்லிக்குச் சென்று கைது செய்ததை வைத்துக்கொண்டு எவ்வளவு விமர்சனங்களை முன்வைத்தீர்கள்? இப்போது நேரடியாகப் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டி ருக்கிறது.

செய்தியாளர்: தமிழ்நாட்டில் இதற்கு முன் னர் இவ்வளவு பெரிய அளவில் இந்தப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டதில்லை என்று கூறப்படுகிறது. இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

ஆ.இராசா: இப்போது ஆட்சி மாறியிருக்கி றது. போதைப்பொருளைத் தடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது.

'START RUN, STOP DRUG' என்று சொல்வது, போதைப்பொருளைத் தடுப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்வது போன்றவற்றைப் பற் றிப் பேசுகிறார்கள். ஆனால், இப்போது இவ்வ ளவு பெரிய அளவில் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கும்போது, இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

இந்தப் போதைப்பொருள் எங்கிருந்து வந் தது? யார் கொண்டு வந்தார்கள்? எங்கே கொண்டு செல்லப்பட இருந்தது? இதற்குப் பின் னால் யார் இருக்கிறார்கள்? இந்தக் கேள்விகளுக் கெல்லாம் பதில் கிடைக்க வேண்டும்.

இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொ ருள் கடத்தல் நடைபெற்றிருக்கிறது என்றால், அதற்குப் பின்னால் ஒரு பெரிய வலையமைப்பு இருக்கிறதா என்பதையும் விசாரிக்க வேண்டும்.

செய்தியாளர்: பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் மூலம் கிடைத்திருக்கக்கூடிய பணம் அரசியல் கட்சிக ளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்குமா?

ஆ.இராசா: இந்தப் பணத்தை எப்படி முறை யாக அரசாங்கத்தின் திட்டங்களுக்குப் பயன்ப டுத்த முடியும்? இவ்வளவு பெரிய அளவில் பணம் கிடைத்திருக்கிறது என்றால், அந்தப் பணம் எங்கே செல்கிறது? யார் அதைப் பயன்படுத்துகி றார்கள்? இதையெல்லாம் விசாரிக்க வேண்டும்.

இந்தப் பணத்தை அரசாங்கத்தின் கருவூலத் துக்குக் கொண்டு வந்து, நாங்கள் இதைப் பயன் படுத்தி பாலம் கட்டப்போகிறோம் என்று சொல்ல முடியுமா?

செய்தியாளர்: கட்சிக்காக இந்தப் பணம் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் அல்லது அமைச்சர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா?

ஆ.இராசா: நான் கேட்கும் கேள்வி அது வல்ல.

இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொ ருள் எப்போது தமிழ்நாட்டுக்குள் வந்தது? எத் தனை இடங்களில் இதுபோன்ற போதைப்பொ ருள் இருக்கிறது? இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதுதான் இது பிடிபட்டிருக்கிறது.

நீங்கள் நியமித்த டி.ஜி.பி. இருக்கிறார். 65 குழுக்கள் இருக்கின்றன. போதைப்பொருள் தடுப் புப் படைகள் இருக்கின்றன. இவர்கள் எல்லோ ரும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

இந்தப் போதைப்பொருளை அவர்கள் பறிமு தல் செய்யவில்லை. வேறு ஒரு அமைப்புதான் அதைப் பறிமுதல் செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுதான் கடைசியாகப் பறிமு தல் செய்யப்பட்ட போதைப்பொருள் என்று அவர் கள் சொல்லவில்லை. எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி, இன்னும் அதிகமான போதைப்பொருள் இருக்கக்கூடும். எதிர்காலத்தி லும் இதுபோன்ற சம்பவங்கள் வெளிவரலாம்.

இதையெல்லாம் சாதாரணமாக எடுத்துக் கொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் அமைச்சர் ஆதவ் அர் ஜுனா உள்ளிட்டோர் தி.மு.க. ஆட்சியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகமாக இருப்ப தாகச் சட்டமன்றத்தில் பல்வேறு புள்ளிவிவரங்களைப் பேசியிருக்கிறார்கள்.

இப்போது இந்தச் சம்பவம் குறித்து அவர்களி டம் போய்க் கேளுங்கள். இவ்வளவு பெரிய அள விலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட் டிருக்கிறதே, இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று கேளுங்கள்.

எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, இந்த மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் பயங்க ரவாதச் செயல்களுடனும் தொடர்புடையதாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. மூளைச் சலவை செய்வதற்கும், சர்வதேச ஆயுதக் கடத்த லுக்கும், எல்லை தாண்டிய பயங்கரவாதச் செயல்களுக்கும் இதுபோன்ற வலையமைப்பு கள் பயன்படுத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

இது மிகவும் தீவிரமான பிரச்சினை. இதில் பாதுகாப்பு அச்சுறுத்தலும் இருக்கிறது; நிதி தொடர் பான அச்சுறுத்தலும் இருக்கிறது. அதற்குப் பிறகு தான் போதைப்பொருள் பயன்பாடு என்ற பிரச் சினை வருகிறது.

இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொ ருள் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட இருந்ததாகச் சொல்லப்ப டும் நிலையில், மத்திய அரசு அதைக் கைப்பற்றி யிருக்கிறது. ஆனால், இதுகுறித்து அரசாங்கம் பெரிய அளவில் பதற்றமடைந்ததாகவோ, உரிய நடவடிக்கைகளை உடனடியாக அறிவித்ததா கவோ தெரியவில்லை. மிகவும் சாதாரணமாகப் பேசுகிறார்கள்.

இவ்வளவு தீவிரமான பிரச்சினையைச் சாதா ரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இதற்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதை முழுமை யாக விசாரிக்க வேண்டும்.

செய்தியாளர்: இதில் எந்த மர்மமும் இல்லை என்று நீங்கள் கூறுகிறீர்களா?

ஆ.இராசா: இதில் மர்மம் எதுவும் இல்லை என்று சொல்வதைவிட, நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தாலே பல கேள்விகள் எழுகின்றன. அதற் கான பதில்களை அரசாங்கம் அளிக்க வேண் டும்.

உங்களுடைய போதைப்பொருள் தடுப்புப் படைகள் எங்கே போயின? போதைப்பொரு ளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தீர்கள். மாணவர் கள் மத்தியில் நின்று சத்தியம் செய்தீர்கள். அந்தச் சத்தியம் என்ன ஆனது?

எல்லாமே ரீல்ஸாகத்தான் இருக்கிறதா? நீங் கள் செய்த பிரச்சாரங்கள் எல்லாம் சமூக வலை தளங்களில் வெளியிடப்படும் காணொளிகளுக் காக மட்டும்தானா?

'Start Run, Stop Drug' என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். ஆனால், இப்போது என்ன நடந்திருக்கிறது?

இந்த அரசாங்கம் இதுபோன்ற செயல்களைத் தடுக்க வேண்டிய பொறுப்பைச் சரியாக நிறை வேற்றுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

வெறும் ரீல்ஸ்களில் தங்களை நல்லவர்களா கச் சித்தரித்துக்கொண்டு செயல்படுவதால் மட் டும் போதாது. உண்மையில் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத்தான் மக்கள் பார்க்கி றார்கள்.

இன்றைக்கு நடந்துகொண்டிருப்பதை மக்கள் அறிவார்கள். இந்தச் செய்திகளை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டிய பொறுப்பு உங்க ளுக்கு இருக்கிறது.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. குறிப்பிட்டார்.